CNR NO: TNTH13-002644-2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30-ஆம் நாள் வியாழக்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்**: 401/2022

**வேல்முருகன்** ..... **புகார்தாரர்**

**/ எதிர் /**

**வெங்கடமணி முருகா** ..... **எதிரி**

**வழக்கின் சுருக்கம்**

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td><u>புகார்தாரர்</u>:<br>வேல்முருகன் (56/2026),<br>த/பெ.பழனிராஜ்,<br>No.6, தெற்கு ராஜா தெரு,<br>போடிநாயக்கனூர்,<br>போடிநாயக்கனூர் தாலுகா,<br>தேனி மாவட்டம்.</td><td><u>எதிரி</u>:<br>வெங்கடமணி முருகா (42/2026),<br>த/பெ.செல்லத்துரை,<br>ஸ்ரீ சக்தி சிவம் மோட்டார்ஸ், PLOT NO-1,<br>11-வது நகர், பாரதியார் நகர், பிள்ளர் சாலை,<br>தேனி மெயின் ரோடு,<br>நாகமலை புதுக்கோட்டை,<br>மதுரை மாவட்டம்.</td></tr>
</table>

<table>
<tr><td>2.</td><td>எதிரியின் வயது</td><td colspan="3">42/2026.</td></tr>
<tr><td>3.</td><td>தந்தை/கணவர் பெயர்</td><td colspan="3">த/பெ.செல்லத்துரை.</td></tr>
<tr><td>4.</td><td>மதம்</td><td colspan="3">இந்து.</td></tr>
<tr><td>5.</td><td>தொழில்</td><td colspan="3">–.</td></tr>
<tr><td>6.</td><td>முகவரி</td><td colspan="3">ஸ்ரீ சக்தி சிவம் மோட்டார்ஸ், PLOT NO-1, 11-வது நகர், பாரதியார் நகர், பிள்ளர் சாலை, தேனி மெயின் ரோடு, நாகமலை புதுக்கோட்டை.</td></tr>
<tr><td>7.</td><td>தாலுகா, மாவட்டம்</td><td colspan="3">மதுரை தெற்கு, மதுரை.</td></tr>
<tr><td>8.</td><td>சம்பவம் நிகழ்ந்த நாள்</td><td colspan="3">பொருந்தாது.</td></tr>
<tr><td>9.</td><td>கைது</td><td colspan="3">––</td></tr>
<tr><td>10.</td><td>பிணையில் விடுவித்தல்</td><td colspan="3">––</td></tr>
<tr><td>11.</td><td>எதிரி சிறையில் இருந்த நாட்கள்</td><td colspan="3">––</td></tr>
<tr><td>12.</td><td>புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">12.01.2022.</td></tr>
<tr><td>13.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி</td><td colspan="3">12.04.2022.</td></tr>
<tr><td>14.</td><td>அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட தேதி</td><td colspan="3">26.05.2022.</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">21.07.2023.</td></tr>
<tr><td>16.</td><td>விசாரணை துவக்கம்</td><td colspan="3">25.08.2023.</td></tr>
<tr><td rowspan="2">17.</td><td rowspan="2">சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>26.09.2023</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td colspan="3">10.07.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">21.05.2024.</td></tr>
</table>

<table>
<tr><td rowspan="7">20.</td><td rowspan="7">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>09.01.2024</td><td>309 of Cr.P.C</td><td>349/2024</td><td>Allowed</td></tr>
<tr><td>09.01.2024</td><td>309 of Cr.P.C</td><td>350/2024</td><td>Allowed</td></tr>
<tr><td>20.06.2024</td><td>311 of Cr.P.C</td><td>4056/2024</td><td>Allowed</td></tr>
<tr><td>06.11.2025</td><td>311 of Cr.P.C</td><td>578/2025</td><td>Dismissed</td></tr>
<tr><td>13.11.2025</td><td>Re-Open Petition</td><td>2418/2025</td><td>Allowed</td></tr>
<tr><td>13.11.2025</td><td>311 of Cr.P.C</td><td>2419/2025</td><td>Allowed</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="4">தண்டனை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="4">வழங்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td rowspan="2">23.</td><td rowspan="2">தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள்</td><td colspan="4">23.06.2022 முதல் 10.03.2023 வரை – எதிரி மீது பிடிகட்டளை நிலுவையில் இருந்தது.</td></tr>
<tr><td colspan="4">26.03.2025 முதல் 06.11.2025 வரை – எதிரி மீது பிணையில் செல்லா பிடிகட்டளை நிலுவையில் இருந்தது.</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td colspan="4">வழங்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="4">23.06.2022 முதல் 10.03.2023 வரை மற்றும் 26.03.2025 முதல் 06.11.2025 வரை – எதிரி மீது பிடிகட்டளை நிலுவையில் இருந்ததும் மற்றும் புகார்தாரர் தரப்பு சாட்சியை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததும்.</td></tr>
</table>

*****

இவ்வழக்கு 12.04.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 17.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.செல்வகுமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.M.பாலமுருகன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

1). இவ்வழக்கானது புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 மற்றும் 142-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). **<u>மனுவின் சுருக்கம்</u>**:

2.1). எதிரி, புகார்தாரரிடம் கடந்த 30.10.2021 அன்று ரூ.6,69,000/-த்தை கடனாகப் பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக ரூ.6,69,000/-க்கு 01242699 என்ற எண் கொண்ட தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, நாகமலை புதுக்கோட்டை கிளைக்குரிய காசோலையை புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் IDBI வங்கி, போடிநாயக்கனூர் கிளையில் வசூலுக்கு செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்ற காரணத்தினால் காசோலையானது 30.11.2021 அன்று Dishonour ஆகி திரும்பிவிட்டதாகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு புகார்தாரர் 13.12.2021 அன்று எதிரிக்கு அனுப்பிய சட்டஅறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டு,

எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமலும், இதுவரை எதிரி காசோலைக்குரிய தொகையைத் திருப்பிச் செலுத்தாமலும், எதிரி தனது வங்கி கணக்கில் போதி பணமில்லை என்ற விபரம் தெரிந்து கொண்டே புகார்தாரருக்கு இக்காசோலையை வழங்கி ஏமாற்றியுள்ளார் என்றும்,

2.2). எனவே, எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிரிக்கு தண்டனை வழங்கி உரிய இழப்பீட்டை எதிரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டி புகார்தாரர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

3). எதிரிக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிரி உத்தமபாளையம் விரைவு நீதிமன்றத்தில் ஆஜரானபோது, எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து 21.07.2023-ஆம் தேதி விளக்கி கூறி வினவியபோது, எதிரி பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன், பொய் வழக்கு என்று கூறியுள்ளார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4). **<u>புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் வேல்முருகன் என்பவர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.1–ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

5). புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து 21.05.2024-ஆம் தேதி கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சி என்றும், வழக்கு காசோலையும், காசோலையில் உள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினார். போதிய வாய்ப்பளித்தும் எதிரி எந்த ஒரு சாட்சியத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை.

6). **<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

<u>8). **தீர்வுக்குரிய பிரச்சனை**</u>:

8.1). இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8.2). மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9). **தீர்வும் அதன் காரணமும்**

9.1). வழக்கு காசோலை எதிரியின் வங்கிக் கணக்கிற்குரிய காசோலைதான் என்பது எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.1 வழக்கு காசோலையானது 29.11.2021-ஆம் தேதியிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளை, IDBI வங்கியில் வசூலுக்குச் செலுத்தியுள்ளார் என்பதும், மேற்படி காசேலையானது 30.11.2021-ஆம் தேதியில் போதிய பணமில்லை என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது என்பதை ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வரையான ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

9.2). காசோலை திருப்பப்பட்டவுடன் எதிரிக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு சட்ட முறையான காலத்தில் சார்பு செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பானது 13.12.2021-ஆம் தேதி புகார்தாரரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை எதிரி 15.12.2021-ஆம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர் சட்டமுறையான காலத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதையும், அதனை எதிரி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதையும் மேற்படி சான்றாவணங்களின் வாயிலாகப் புகார்தாரர் தரப்பு நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3). மேலும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கானது 12.01.2022-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 12.04.2022-ஆம் தேதி முறையாக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கானது உரிய காலத்திற்குள் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு

காசோலையானது எதிரி, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து விடுபடக் கொடுக்கப்பட்டதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், எதிரி காசோலையையும், அதிலுள்ள கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் வினவியபோது, எதிரி பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன், பொய் வழக்கு என்று மட்டுமே கூறியுள்ளார். மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, எதிரி, புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சி என்றும், வழக்கு காசோலையும், காசோலையில் உள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளாரே தவிர, வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என எதிரி மறுக்கவில்லை. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 மற்றும் 139-ன் கீழான சட்டப்படியான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக எழுகிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.4). மேற்படி சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுத்துரைக்கும் வகையில், எதிரி தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய நேரடியாக சாட்சிகளை முன்னிலைப்படுத்த வேண்டியதில்லை. மாறாக வழக்கை இதர சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாகவோ, அல்லது சூழ்நிலை, சந்தர்ப்பத்தின் வாயிலாகவோ மறுத்துரைக்கலாம் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் பல்வேறு முன் வழக்குகளில் வழிவகை செய்துள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் மறுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில்,

9.5). எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணைகூட செய்யப்படவில்லை. மேலும், எதிரி தரப்பில் வழக்கை மறுதலிப்பதற்கு சாட்சிகள் யாரையும் முன்நிறுத்தவும் இல்லை. மேலும், கடந்த 26.09.2023-ஆம் தேதி முதல் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு அளித்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. மேலும், கடந்த

21.05.2024-ஆம் தேதி முதல் எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டபோதிலும், எதிரி தரப்பால் தற்போது வரை வழக்கை மறுத்துரைக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, புகார்தாரருக்கு ஆதரவான மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881 பிரிவு 139-ன் கீழான அனுமானம் எதிரி தரப்பால் மறுத்துரைக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.6). எதிரி, புகார்தாரரிடம் கடனாக ரூ.6,69,000/-த்தினைப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி கணக்கு வைத்துள்ள நாகமலை புதுக்கோட்டை கிளை, Tamilnadu Mercantile Bank LTD–ன் 01242699 என்ற எண்ணுள்ள காசோலை ஒன்றை ரூ.6,69,000/-த்திற்கு 29.11.2021 என தேதியிட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளதும், மேற்படி காசோலையைப் புகார்தாரரும் அவரது வங்கியில் 29.11.2021-ஆம் தேதி வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை “Insufficient Fund” என்ற காரணம் காட்டி 30.11.2021-ஆம் தேதி காசோலை திருப்பப்பட்டுள்ளதும், எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தே புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளதும் நிரூபணமாகிறது. எனவே, எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் இவ்வழக்கில் அனுமானிக்கப்பட்டுள்ளதாலும், மேலும், இவ்வழக்கு கடந்த 4 வருடங்களாக நிலுவையில் இருந்து வருவதாலும், அதனால் புகார்தாரருக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலுக்கு வழக்கு காசோலைத் தொகை கு.வி.மு.ச பிரிவு 357(3)-ன் கீழ் இழப்பீட்டுத் தொகையாக புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.7). புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலித்த வகையில், எதிரி மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக

தீர்மானிக்கப்படுகிறது. எனவே, எதிரியை இந்நீதிமன்றம் குற்றவாளி என தீர்மானிக்கிறது.

10).**தீர்வு**:

10.1). முடிவாக, புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு தண்டனையாக ஒரு வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(2)-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. காசோலைத் தொகையான ரூ.6,69,000/-த்தை இழப்பீட்டுத் தொகையாக கு.வி.மு.ச பிரிவு 357(3)-ன் கீழ் எதிரி, புகார்தாரருக்கு இந்த தீர்ப்பு தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 431 மற்றும் உ/இ பிரிவு 64 இ.த.ச-ன் படி எதிரிக்கு 1 மாத காலம் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

10.2). மேற்படி தண்டனை காலங்கள் முடிந்த பிறகும் எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 421-ன் படி புகார்தாரர் நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்து கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது.

10.3). இவ்வழக்கில் தடயப் பொருள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு,

திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஜூலை திங்கள் 30-ஆம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.30 18:32:56 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

**1). புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.1 | திரு.வேல்முருகன் | புகார்தாரர் |

**2). புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 29.11.2021-ஆம் தேதியிட்ட Tamilnadu Mercantile Bank LTD வங்கி கிளை கணக்கு எண்.015100050314560-ன் காசோலை எண்.01242699 அசல். | ம.சா.1 |
| 2. | ம.சா.ஆ.2 | IDBI BANK வங்கி கிளையின் 30.11.2021-ஆம் தேதிய ரிட்டன் மேமோ அசல். | ம.சா.1 |
| 3. | ம.சா.ஆ.3 | 13.12.2021-ஆம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் ரசீது அசல். | ம.சா.1 |
| 4. | ம.சா.ஆ.4 | 15.12.2021-ஆம் தேதி எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அசல். | ம.சா.1 |

**3). புகார்தாரர் தரப்பு சான்றுப்பொருள்களின் பட்டியல்**: தாக்கல் இல்லை.

**4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்களின் பட்டியல்**: தாக்கல் இல்லை.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.30 18:33:00 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.